காட்சி மிதப்பாற் கருத்தண்டாய்—காட்சிப்
பொருளாயிற் சித்தாப் புகுவதனு லேனைப்
பொருள்வேரே சித்தாப் புகும். (ககக)

சர்வமித்தை யென்பதூஉஞ் சர்வம் பரமெனலூஉஞ்
சர்வ மூணர்ந்தக்காற் சத்தியமே—சர்வமெனல்
சித்துசட பேதமெலாஞ் சீர்தூக்கி யாயுங்கா
லுத்தியுடன் சோதனையு மொத்து. (கஉ0)

அறிவுக் கறிவே யயலாகத் தோற்றும்
புறத்தகத்தும் வேறு பொருளின்—றறிவோ
சுயஞ்சோதி மாறுகத் தோற்றல் விகாரஞ்
சுயஞ்சோதி காணுத் துணிவு. (கஉக)

உபாதான மன்றி யுபாதேய மில்லே
யுபாதேய மன்றே வுலக—மபாவமதேன்
மெய்யோ மலடிமகன் மெய்யோ வசைவாதி
பொய்பொய்பொய் பொய்பொய்பொய் பொய். (கஉஉ)

உடல்குழவி யின்றே லுடல்கிழம துண்டோ
வுடல்போ லுணர்வுக்கு முண்டோ—திடமதறக்
காணே னதுவாகிற் கற்பனைக ளற்றதன்றே
கோணுமோ சோதிக் குறி. (கஉங)

உடற்குழவி தொட்டிங் குடற்கிழம தந்த
மூடலுக் கபாயமென லொன்றே—திடனின்றே
சிற்சோதி யென்னுஞ் சிறுகுழவி யந்தமட்டும்
பற்பல சென்ம பயம். (௧௨௮)

அறிவாங் கடலி லறிவா மலமே
லறிவா மிலதா னலையு—மறிவினுண்மை
யாழ மறியி னகலுமே யித்தனையும்
பாழுலகம் வேறுமே பார். (௧௨௯)

அறிவென்னுஞ் சிற்சோதி யாங்காங்கு காணி
னறிவே னிறைவெங்கு மாகும்—புறமின்றிக்
கற்பனைக ளற்றநிலை கண்டிலமே யின்னதுபோ
லற்புதம்வே றுண்டோ வகம். (௧௩௦)

என்று மொருபடித்தா யெங்கு மறிவிருக்க
னன்றென்றுந் தீதென்று நாடலெவன்—சென்றெங்கு
மையோ வறிவன்றி யைந்தா றறிவெங்கே
மெய்யாகக் கொள்வதெவன் மேல். (௧௩௧)

அறிவாம் படத்தி லமைசித் திரங்க
ளிறையாதி மூன்று மெவையு—நிறைவே
கற்பனைகள் வேறன்று காணவே காட்டுதும்யாஞ்
சிற்சுக னாகச் செறிந்து. (௧௩௨)

ஞானச் சுடரி னனவாதி போயதெங்கே
ஞானச் சுடரா நனவாதி—ஞானத்
திரிபென்னிற் காட்டறியீர் நீரா மயக்கக்
கருவறுவ தெங்ஙன் கடை. (௧௩௩)

உலகுண்மை யென்பா ருலகா யதரோ
பலபோகம் வேண்டிப் பணிவ—ருலகிறைதா
னுள்ளதுபோற் பாவித்திங் குள்ளமதைப் பாராத
கள்ளருக் கென்னே கதி. (௧௩௦)

கண்ட பொருளிடமாக் காண்ட லறிவன்றே
லுண்டோ புடைபெயர்ச்சி யோடிவரக்—கண்டதின்றே
லன்றே விகார மறிவன்றேற் றோராதே
னன்றே சுயஞ்சோதி யா. (கசுக)

ஞானசுயஞ் சோதியொன்றே நானெனதென் றேரிரண்டா
மீன வபிமானத் தேங்கலெவன்—ஞானச்
சுடராகாக் குற்றமன்றே தொல்வினையேன் கூறன்
மடமைகுரு சொன்ன மதி. (கசுஉ)

உணர்வுண்மை யன்றே லுலகுண்மை யென்ப
மூணர்வன்றிக் காட்டி லுலகைக்—கணிப்பரிதே
லெத்தை யெதுகாண்ட லெத்தை யெதுசுயித்தல்
வித்தையன்றிக் காட்டுதுமோ வேறு. (கசுங)

வித்தைக்கு வித்தையெனல் வேத முடிவன்றே
வித்தைவிளங் காவிடத்து வித்தையன்றே—மித்தை
வளர்க்குங் கருவி மலடிமைந்தன் போலாம்
விளக்குமோ தன்னை விளைந்து. (கசுச)

திரிபுடிதா னெங்கே தெரிவன்றி யெங்கும்
திருவியமெல் லாந்தெரிவேற் றேரின்—வருமோ
சிறிதும் புடைபெயர்ச்சி சித்தினது தோற்ற
மறிவொன்றே யுண்மையென லாம். (கசுடு)

உயிருக் குடலு முடலுக் குறவு
மயலும் பகைவேட மாகுங்—துயரன்றே
மாற்றின் முதல்வேட மாளுமே யேனையவை
சாற்று கணமதனிற் ருன். (கசுசு)

உயிர்சுயஞ் சோதியென வுண்மையாக் காணின்
மயலனைத்து மக்கணமே மாயும்—பயகம்ப
ஞதியிலை யென்சொல்வ ஞன்ந்தப் பேறதனை
யாதியந்த மற்றநிலை யால். (கசுஎ)

யானேபொய் மெய்யென்னல் யாரு முடிவதனுன்
ஞான தினகரனே நானென்னல்—ஞானம்
பராபரமாய் நிற்குநிலே பார்க்குங்கா லெங்குஞ்
சராசரம தென்பதிலே தான். (கஙஅ)

நானென்னல் சித்சோதி நானுகார்க் கென்கற்று
மூனுடலே நானென்ன லோடுமோ—வீனமுறக்
கண்ட பொருளிடங்கள் காணு தறிவாமோ
வெண்டிசையு மில்லாம லே. (கஙக)

அறிவாக்கார் யாது மறிவா யிருக்க
நிறைஞானப் பேற்ரு னிலேயென்—குறைநிறைவாய்
வாயாற் பிதற்றலெவன் மாயா சகத்தோற்றந்
தேயா சிறிதுஞ் சிதைந்து. (கசo)

சித்தப் பிராந்தி செகப்பிராந்தி யென்பவற்றுட்
டித்தப் பிராந்தி செனியாதேல்—மற்றைச்
செகப்பிராந்தி யென்செய்யுந் தீரா நிழலா
யகத்தொளியா நிற்கு மமைந்து. (கசக)

உணர்வே யுலகவ் வுணர்வே யொளியா
முணர்வின்றேற் சாந்த முதியா—துணர்வொன்றே
சத்தியஞ் சத்தியஞ் சாதிக்கில் வேறெல்லா
மித்தைமித்தை யென்றே விடும். (கசஉ)

ஆயி னறிவா மயலனைத்து மாவதெவன்
ஞாயமதாற் போதித்தே னுனைனக்கு—வோயா
தெனக்குநான் சத்துருவே யேனையரு மிங்ங
னுனற்கரிய சோதி யுற. (கசங)

அதுவதுவாத் தோற்ற லகமன்றி யெங்கே
யெதுவஞ் சுயம்பா யிலேயே—யதனைப்
பழிப்பதெவன் வேரூய்ப் பகர்வறியீ
ரொழிப்பதெவன் சென்ம முறல். (கசச)

ஒளிநாட்டம் போக்கி லுலகாக நிற்பந்
தெளிவின்மை காரணத்தாற் றோரி—னெளிதி
னகம்பிரம மென்ரு னரனு மறியா
தகங்கொண்டு வைவதென்ன வாம். (கசஎ)

பொட்டக்ராப் போலவே போனவெலா நானென்னீர்
சுட்டிகா னென்பதெங்கே சோதனையி—லெட்டீ
ரயலே யளப்பதெவ னேயையோ பாவ
மயல்போக்க லெச்சென்ம மாண்டு. (கசசு)

அறிவே யிருளா மறிவே யொளியா
மறிவன்றி யில்லே யயரு—னறிவன்றிக்
காட்டீ ரணுவுங் கதைகாட்டு வீர்சும்மா
வோட்டுமோ நம்மயலே யுற்று. (கசள)

எந்நிலைய னெவ்வணத்த னெப்பெயர னெத்தொழில
னன்னவன்ன வாறுகா ணுதலா—லென்னேகா
னெவ்வாறுய்க் காண்ப னிலையே நிலையாக
வெவ்வாறிங் குய்வ திலே. (கசஅ)

அவத்தைதொறு மெவ்வாரே வவ்வாரு யென்னே
யவப்பிறவி தோறு மறிவ—னெவற்றிலுநா
னிப்படியே யாகி லெதுதானே சொந்தகா
னெப்படிதா னுய்வ தினி. (கசக)

உடல்பாவந் தானே யொழியாப் பிறவி
யுடன்மயம்யா மாதலினு லுண்மை—யிடமாக
விப்பிறவி சாட்சி யினியேனும் போவதெங்ஙன்
கைப்பிடிமி னுண்மைநிலை கண்டு. (கடo)

அறிவென்னல் சித்சோதி யன்றேற் பிறிதாம்
பிறவொளிகள் யாவும் பிறிதேற்—பிறவனேத்து
மில்லையென லெங்கே யிருக்கி லறிவுண்மை
யல்லவே யாராய்ந் தறி. (கடக)

அதுவது வாத லறிவே பிறிதே
லதுவது வாகி லகற்றே—மெதுவு
மியையா தறிவே யியைவதாத் தோற்று
மயல்போலென் றெங்கு மறி. (கடுஉ)

அகவிருளைக் காண்பா ரகவொளியைக் காணு
ரகவொளியைக் காண்ப தருமை—யகவொளியே
முத்திக்கு வித்து முறையிடினும் வேறின்றி
யுத்திக்கு மொத்தே யுறும். (கடுஊ)

அகவொளியைக் காண்பா ரகம்பிரம மென்ன
னகைமுகங்கொண் டேற்பர் நயந்தே—யகவிருளா
லொன்று மிகழ்வதனு லில்லதோ மெய்யொளிதா
னென்றுய்வார் தற்கண் டிவர். (கடுசு)

ஆன்மா வொளியென்ன லாச்சரிய மல்லவே
தான்காணுத் தப்பிதமே தப்பாகு—மேனிகழ்வீர்
நானெனா னுக்காணீர் நாட்டவிழப் பேன்கல்லீர்
போனகமே நற்கதியாப் புக்கு. (கடுடு)

ஓர்வதிதை மானிடமே யுண்டோ பிறசென்மஞ்
சார்வுநமக் கான்மாவே தக்கதி—சார்வாமே
தேகஞ் சடமன்றே சென்மந் துணையாமோ
யூகியா தென்னை வுடல். (கடுசு)

அகவொளியான் மாவென்ன லற்புதமென் றேற்பீர்
செகமதனை யின்னதெனத் தேரீர்—மிகுதியாக்
கற்றென் பயன்கண்டீர் கற்றுய்மி னுன்மாவை
யுற்றதுணை வேறெங் குள. (கடுஎ)

தடியைநா னென்பீர் தடியன்றே தேகந்
தடிசாமி யென்னல் தகுதி—கெடுதியோ
வைவதெவ னுசாமி வாதத்தை யேயோரா
துய்வதெவ னெப்போ துறும். (கடுஅ)

தேகக் கொழுப்பன்றே தேராது வைவதிவை
யாகநா னுமோ வறிவன்றே—வேக
மகம்பிரம மென்பதற்கே யாக வியையுஞ்
சுகதுக்கம் போக்குந் துணை. (கடுக)

அகம்பிரம மென்பதனை யார்தடுப் பாரோ
வகமறிவென் றேலா தழிவர்—மிகுதியாய்
ஞானியென் றேற்பதெவன் ஞான மூகந்தறியா
ரோனிவர்க்கு வாத மிது. (கசுo)

அறிவன்றி யெங்கே யயலக மென்னல்
வெறியாற் பிதற்றலெவன் வேறு—நெறியாகக்
காட்ட வகையறியீர் கைம்பெண்கள் போலழுவீர்
எட்டிலன்றிக் காட்டீ ரிதை. (கசுக)

புத்திகெட்ட மானிடரே புத்தியோ வைவதிதை
யுத்திக்கு மாறென்னை யோராதென்—கத்தபத்தை
யேனெவ்வீர் கோப மெவனே வரற்கறியே
மூனுடலி யானென் றுவந்து. (கசுஉ)

அறிந்தார் பிழைப்பா ரகமமதை யின்றி
யறியார்பிழைப்பதெவ னந்தோ—வறிவே
யகம்பிரம மென்பதொக்கு மாயாது வைவேன்
செகமின்றிக் காணுத் திறம். (கசுங)

நும்மினுந் துட்டரெவர் நோக்காது வைவதனு
லம்மம்ம வீதென்ன வாச்சரிய—மெம்மையினுங்
காணும் பிறப்பகறல் கற்றென் பயன்கண்டீர்
நாணுதிங் குய்வதெவ னுய். (கசுச)

ஆன்மாவுஞ் சோதிதனி லாறிவா ரிவ்வுலகை
யான்மாதான் ஞானமன்றே வாயுங்கா—லான்மாவைக்
கண்டா ருலகைக் கணிப்ப ரஃதன்றிக்
கண்டார் கணிப்பதெங்ஙன் காண். (கசுடு)

ஆன்மாவைக் காண்ட லருந்தவத்தா லன்றியிலே
யான்மாவல் லாவுயிர்க ளாருண்—டான்மாதா
னுகுபெய ராநிற்கு மாரறிவா ரிவ்வருமை
யாகமே தானுத லால். (கசுசு)

உடன்மட்டாக் காண்ட லுயிரொன்ப தாகு
முடல்பூத மன்றி யுளவோ—திடமாக
வாயி லதுவு மறிவா மறிவாத
லாயதான் மாவென்ப தாம். (கசுஎ)

உடல்பந்தம் யோக முணர்வுபந்த ஞானந்
தடையே தெதிர்மறையாச் சாற்றிற்—கெடுவர்
மனமடக்கல் யோக மயலறுத்தன் ஞானம்
பிணைப்பயனுண் டென்னல் பிழை. (கசுஅ)

பிறவி யறுக்கப் பிறிதில்லை யுத்தி
யெறியன்மி னென்சொல்லை யெங்கு—மறிவுடையீர்
தானேதா னுகத் தகுநெறியீ தன்றியுண்டோ
வேனே வுடன்மயக்க மிங்கு. (கசுக)

உலகுண்மை யென்று மொருவரசத் தென்றுங்
தொலையா வழக்காத் தொடர்வே—னிலையா
வறிவாகுங் கோலா லளந்தனே யோர்ந்து
நெறிநிற்ப தென்றே நிலைத்து. (கஎ0)

ஒருபோ தலகா வொருபோது பாழா
மருவுவது யாதா மதியா—தருவையே
நானென் றழிவீர் நடுநிலையி னிற்பதென்றே
ஞானதனு வாய்ப்ப தெந்த நாள். (கஎக)

ஒயாத் திருத்தி யுவப்பதுநா னன்றியிலை
யோயாது தந்துநா னுயாதென்—மாயா
மயக்கமிதை மாற்றுது வந்தமட்டும் பேச்சேன்
மயக்கறுமோ சென்ம வகை. (கஎஉ)

இயையாத நானே யியைவதாக் கொள்வீ
ரியைவ தெவர்பா லிலையே—மயலகன்று
நானேநா னுகும்வகை நாட்டப் படிப்பிலையே
யூனேநா னென்றுழல்வீ ருற்று. (கஎசு)

நானெனலைக் காணர் நயந்தசித்தி பெற்றதெங்கே
நானெனலி லன்றே நயந்துழற—னானெனலைத்
தள்ளியொன்றுங் காட்டறியார் தானுகர்தல் தன்னையன்றே
வுள்ளினிதை யேலா ருலகு. (கஎச)

உணர்வுதனைக் காண வுறுவதெவண் வேறு
வுணர்வா முடிவதெவ ணேரி—னுணர்வே
திரிபுடியா மன்றே சிறிதுமே லாதென்
பெரிதுகற் றென்னே பிற. (கஎஞ)

யானுநா னென்ப னிறையுநா னென்பனன்றே
நானெற்குப் பேதமிலை நாடுங்கா—னானெனலில்
யார்சிறிய ரார்பெரியர் யானே பெரியனென்ப
னூர்பேரொன் றில்லா துறின். (கஎசு)

மானிடனு னென்பீர் மதிகெட்டுக் காட்டறியீ
ரூனசம்பிங் காதியன்றி யுள்ளளவு—மானமட்டு
மெவ்வா றுயிர்காண்பீ ரெவ்வாறு காட்டறிவீ
ரெவ்வாறு சென்மமென வில். (கஎஎ)

உயிரன்றி யில்லை யுடலுநா னென்ன
லுயிர்பாவ மன்றே வுடலு—னுயிரை
யளக்கி னுடல்பாவ மக்கணமே யில்லை
விளக்கற் கறிவே மிசை. [கஎஅ)

அருவமதைத் தள்ளி யயலுருவங் காட்டீர்
தெரிவன்றி யெங்கே தெரிப்பீர்—விரியுலகை
வேதாந்தி யென்றிருப்பீர் வேடத்தாற் பாட்டதனு
லேதாந்த சென்ம மிலை. (கஎக)

திரைதள்ளிக் காட்டிற் சிதம்பரமாஞ் சோதி
திரையோ மதிமயக்கந் தேரீர்—திரிகால
ஞானத்தாற் போமோ நகருநிட் காமியத்தா
லேனகலுங் கற்ரு லிவண். (கஅ0)

அற்புதத்தை மெச்சி லகன்றதோ தன்றிரைதா
னற்பமு மெங்கேனு மாஆ—கற்பனையே
கற்பானைக் கற்றல் கலங்காத வத்துநிலை
யற்புதமீ தல்ல தவம். (கஅக)

பார்ப்பானைப் பாராத பார்வை பிறவிதருந்
தீர்ப்பிதுபோற் சத்தியமாந் தீர்ப்பில்லை—பார்க்குங்கா
லெங்கிருந்து வந்தோ மினிப்போ மிடமெங்கே
தங்கு மூடலலவே தான். (கஅஉ)

நானேநா னென்போனு நானேநான் மாறுக
நானலனு நின்றேனு நானேநா—னனெனலைக்
காணுர் புதைப்பர் கரியாக நீறுசெய்வர்
மாணு மனிதர் மறந்து. (கஅங)

உடல்பாவத் தாலே யுயிர்பாவம் வாரா
தொடர்பாவ சென்மத் துறுத்துங்—கடமையிதேற்
சென்ம மொழிவதெவன் றேவையிலை யென்றிடினுங்
கன்மந் தவிராக் கடை. (கஅச)

ஆகாயம் போலு மறிவாஞ் சிதாகாய
மாகாய மாகா ரரிதென்கே—போகார்
தனேயறியச் சற்றுந் தடையிதுவே யன்றிப்
பினேயெங்கு மில்லை பிழை. (கஅடு)

ஆய்வார் பிழைப்பரோ யாயார் பிறப்புறுவ
ரோய்வுறுதல் யாதினுங் குறதியிலை—சேய்மை
யணிமை யறிவன்றி யாகாதே காட்ட
வணிமையதோ சென்ம மறல். (கஅசு)

பொருளல்ல வற்றைப் பொருளெனலுந் தானே
பொருளல்ல வென்றவற்றைப் போக்குந்—தெருள்போலச்
சுகமல்ல வற்றைச் சுகமெனலுந் தானே
புகவிடலுந் தானே புறம். (கஅள)

அறிவன்றித் தானெனரு ளுயுங்கா லில்லை
யறிவா முதற்கருவி யத்தாற்—பிறிதே
லறிவறி யாமை யகக்கா முடியும்
பிறவியற லெங்ஙனே பின். (கஅஅ)

அதுவது வாகா வறிவெங்கு மில்லை
யெதுகணமு மெங்கேனு மென்னின்—மதியெங்கே
சும்மா விருத்தல் சுகமென்னக் கோடலிலை
யம்மா பிறப்பெங் கறும். (கஅக)

ஞானமான் மாவென்னுர் ஞானகிலை யீதறியின்
ஞானிகா ளென்கற்று ஞானமென்பீர்—ஞான
மரிதரி தென்பதனே யாயாதே யெங்கும்
பெரியகுரு வாதல் பிழை. (கக0)

உயிரொளாந் தேகமென வுண்மையதா நம்பி
யயலுறவு கொண்டிழப்ப மந்தோ—வுயிருணர்வாக்
காணிற் கொளலிழப்பேன் காணுமே தானுகக்
கோணுமோ பேதமதாக் கொண்டு. (கஉக)

உடனுட்டத் தன்றே வுயிர்பலவாக் காணுங்
திடமதனு லன்றே சென்ன—மிடைவிடா
தாகித் திகைத்திங் கவலமதா நிற்பமந்தோ
வுகிப்ப தென்றுமை யுற்று. (கஉஉ)

எல்லா மவன்செயலென் றெண்ணியு மவ்வாறு
நில்லாது தேகமதா நின்றுழன்று—பொல்லா
மரணமுறிற் செய்வதெவன் மாண்டபின் னுரோ
வுரமறிந்து நில்லா துறின். (கஉங)

என்னே களித்திடுத லிவ்வுடலைத் தானெனவே
மன்னுதே யென்று மரணமுறி—னென்னுமோ
வேதுவரு மோசென்ம மேதுகா னென்பமோ
வீதொழிவ தென்னே விலை. (ககச)

பெண்டுபிள்ளை சுற்றமெனப் பேதித் துடறன்னைக்
கண்டுறவு கொண்டுபினர்க் காண்பமோ—கண்டிடலா
மான்மாவைக் காணி னயலுறவு மேதுமின்றி
யான்மாவெல் லாமொன்ற தா. (ககஞ)

உறவுகொடு மாய்ந்த வுயிலொ மீண்டும்
உறவுகொண்ட தென்பதுண்டோ வுண்டேற்—பிறவியது
மூன்னுறவாய் நின்றதெவர் முன்பின் புகியவரோ
யென்னுறவ ரிப்போது மிங்கு. (ககசு)

எவ்வுடலும் பூதமன்றே வெங்கண மாய்ந்திடினுஞ்
செவ்விதாக் கண்ணிருந்துந் தேராதெ—னெவ்வுயிரு
கொண்டுறவு நீங்காராற் கொண்டிழத்தன் மூடமன்றே
வுண்டுகொ னீங்கா வுறவு. (ககஎ)

அறிவானைக் காணி னயலுறவ துண்டோ
வறிவானெல் லாமொன்றே யாகும்—பிறிவின்றி
யிந்நிலையை யோரா திடுக்குறலெ னெவ்வுயிரு
மன்னியத்தைத் தானென் றறிந்து. (ககஅ)

எவ்வுயிரு மாமுறவிங் கெப்பிறப்பி லேனுந்தான்
செவ்விதாக் கூடுங்காற் சென்மதா—மவ்வவ்
வுடற்கா ரணத்தா லுணரோம் பிறிதென்
றுடலுறவை விட்டுய்பி னுற்று. (ககக)

இவ்வருத்த மேயில்லை யேகவறி வாக்காணி
னெவ்வுயிரு மொன்ரு யிலகுதுமோ—விவ்வுணர்வு
போதிப்பா ரின்றதனைப் புக்கேஞ் பிறவிதனி
னேதுக் குடன்படவீ ரின்று. (உ00)

எத்தனைதான் கற்றாலு மேதுவித்தை தேர்ந்தாலும்
பித்து மனமடங்கப் பேற்றதோ—சத்தலாத்
தேக வுறவைச் சிறிதும் விடாக்கண்ணே
யேகமாய் நிற்பதெவ னிங்கு. (உ0க)

இறந்தனவு மிப்போ திருப்பனவு மேலே
பிறப்பனவுஞ் சீவரன்றே பேதித்—தறிந்தாலு
மன்றே யுடலெவையு மாயாது விட்டிடலெ
னென்றே விசாரத் தறின். (உ0உ)

என்ன சிறப்புறினு மென்ன விழிவுறினு
மன்னதன்ன தாவதுபோ லாவதன்றி—யன்னதன்ன
தானுமோ தானமதா யாகுதுமோ போக்குவரத்
தானுமோ வன்னவைபோ லா. (உ0ங)

நம்மையா னொன்றுணர்ந்தோ நண்ணும் பிறவியதா
வெம்மையினு நம்பிநம்பி யேமார்வ—மம்மா
நிலையிலதென் றெண்ணிலிரோ நீங்கும்வகை யென்றே
வலைவொழிவ தென்றே வகம். (உ0ச)

சொந்தமய லென்றே தொலையாப் பிறவிதொறும்
பந்தமுற்றுங் கையிழப்பம் பார்த்திலிரோ—வெந்தவயி
றொப்போதுஞ் சொந்தமய லில்லையே கொண்டிழப்பே
னெப்போது விட்டெய்வ மிங்கு. (உ0ஞ)

கொண்டிழத்தல் கண்டிருந்துங் கூடிப் பிரிதலுடன்
விண்டிரா தென்னே விபரீதம்—பண்டைப்
பழக்கமதோ நம்பிக்கை பாழாதல் கண்டு
மழைத்துறவு கொள்வதெவ னும். (உ0ரு)

அத்தத்தச் சென்மத்தி லவ்வவ் வுடலளவா
வெத்தெத் துயிரு மிருந்திருந்து—சொந்தமாய்ப்
பாவித் திழக்கும் பழக்கந் தவிர்வதென்றே
சாவுதொறுங் கண்டிருந்துந் தான். (உ0எ)

இந்தசென்ம நாமன் றிருந்து மிதுவாலே
மந்தத் திழத்த லறியாரா—ரிந்தபடி.
யாஞ னமக்கொழிவே தந்தந்தச் சென்மத்து
மேஞே விசாரத் திகல். (உ0அ)

எ துவெதை யெத்தா லெதற்கெதினின் றூத
லெதன்கிழமை யாதி லிருக்கை—யெதுவேனும்
பேத மபேதமதாய்ப் பேசிரண்டு மன்றுகி
யாதலகாக் காண்ட லெதில். (உ0க)

மண்ணின் விகார மனிதாதி யென்றிருக்கி
னண்ணுமோ தக்கசுக நண்ணுவதூஉ—மெண்ணிலிர்கொ
னஞ்செயலா லன்றே நடுநிலையா நிற்பதூஉ
நஞ்செயலே வேறெனலென் ஞம். (உக0)

இயல்பு விகார மெனும்புணர்ச்சி கண்டாம்
வியனுலகங் காட்டா வியந்து—மயலகலப்
பாடைதணைக் கற்றென் பயனடைந்தீர் நிர்விகற்ப
நாடுமோ வீதென் னகை. (உகக)

பிறவிநா மாயிற் பிழைப்பதிலே யென்று
மறிவிருந்து முன்னுதெ னன்தோ—பிறவியிகி
லெப்பிறவி யோவினிதா னேதா வலேகுதுமோ
விப்பொழுதே யாய்வநமை யிங்கு. (உகஉ)

நானென்ன லன்னியமே நானெனற்குச் சொந்தமெது
நானலதை நானென்னி ஞுமோ—வேனென்னி
னல்லவல்ல வென்றே னகலு மெதுவேனு
நல்லறிவை யன்றி னனி. (உகங)

மெய்யுணர்வை யன்றியிலே வேறென்னு மெப்பொருளு
மையமின்றிச் சோதிக்கி ஞுங்காங்கும்—பையத்
தடுப்பார் மடமையாற் ரூங்காது வீழ்வ
ரெடுப்பார் பிடிப்பா ரிழந்து. (உகச)

சூறிலின் விகார நெடில்போ லுலகு
மறிவின் விகார மயலேற்—பிறிதாகக்
காட்டிலெதி சேற்பங் கயவர் புறங்காட்டி
நாட்டமுற லென்றே நமை. (உகடு)

எழுத்தசைசீ ராதி யியைந்தகவி போலப்
புழுத்தசைதோ லாதிப் புணர்ப்பே—செழித்தவுட
லென்றுணட் டந்தவிர்ந்த தென்னை பிறவிதொறு
மென்றுநா மாகு மிவை. (உகசு)

உடலியன்றித் தற்காணு ரோதி யுணர்ந்து
மடமையன்றே போதிக்கும் வார்த்தை—யுடலன்
நருவமெனி லோட லமர்தனிற்ற லாதி
வருபாவ மெங்கே மறுப்பு. (உகள)

அறிவேநா னென்றங் கதுவாகார் மக்கட்
பிறவிய ரேனும் பிறங்கல்—வறிதே
பலகற்று மீளார் பார்க்கினின்று மென்று
மலகி லுயிரு மவம். (உகஅ)

எந்தவுயிர்க் கெந்தவுட லெஞ்ஞான்று சொந்தமதா
மந்தவுடல் சோதிக்கி னன்னியமேல்—வந்ததுபோ
லேகுமன்றே மேலே யெறிந்தகன் மீளாதோ
வாகவறி வேசொந்த மாம். (உகக)

சிற்சோதி யன்றிச் செகமாதி யொன்றுமிலை
சிற்சோதி யாகத் திகழுமே—பொற்பணிபோ
லானர்க்கே யானந்த மல்லார் சுகஞ்சுகமோ
தானுதல் கல்லாத் தலை. (உஉ0)

பிறவி சுகம்பெரிதோ பேராத வண்மை
யறிவு சுகம்பெரிதோ வாயிற்—பிறவிசுக
மூழுள்ள மட்டு முணர்வுசுக மட்டில்லை
யூழெலாந் தாண்டியதா லுற்று. (உஉக)

ஏத்தனுவ தேனு மெமக்கனிய மோதானே
நித்திரையி லெங்கே நிதமுந்தா—னித்தனுவா
நிற்றல் மனோபாவ நீக்கமிரண் டென்பரொன்றே
கற்றுதனை நிற்றலென்று காண். (உஉஉ)

மரணமொன் றென்பர் மயக்கந் தெளியார்
கரணத் தடிப்பிழப்பு காணிற்—கரணந்தா
னுள்ளளவு மெத்தனையோ வுண்டோ வொழிவுதான்
றள்ளுதமித் தீர்வுதனைத் தான். (உஉஈ)

அடுத்ததின் றன்மையுயி ராமென்றூர் நல்லோ
ரடுத்தவுடன் மானிடம தாயு—மடுத்தகுண
மெங்கே நிறிதேனு மில்லையோ நாணந்தா
னங்கம் விடுத்த ழகு. (உஉச)

தன்னுடலைத் தானுதைத் தான்களிப்ப தென்கொலோ
தன்மனை மக்களிலந் தானுமோ—வென்கற்றீ
ரில்லையுணர் வெள்ளளவு மென்சொலினுங் கேளாதென்
கல்விசெருக் கெம்மட்டோ காண். (உஉடு)

மயல்பிறந்த தெங்கே மதியிடத்த தன்றே
மயனிவர்த்தி யெங்கே மதியிற்—றயரை
வினைப்பதுவு நம்மாலே மீண்டுமீண் டென்றுங்
கனைத்தலு நம்மூயல்வே காண். (உஉஊ)

அல்லவற்றை யாமெனலு மாராய்த வின்றிந்த
மில்லவற்றை யுண்டெனலு மெஞ்செயலே—யல்லவெனி
னுனெனதல் லாதவற்றை நானெனதாக் கொண்டழிவ
மானதினு னஞ்செயலே யாம். (உஉஎ)

கலைவதினுல் வேடமே காணுங்காற் றேக
மிலையே யிதையகன்றூ ரெங்குங்—கலையுணர்ந்து
மாளெவனென் றெங்கேனு மாராய்வா ரில்லையே
யாளுடலா யெண்ணி யவம். (உஉஅ)

மனபாவ மல்லா வடிவேது மில்லை
கனமாக்கிக் காணினுங் காணு—மனைத்துருவ
மாக்கினு மாக்கு மதுவாகின் றேகுதிக்கும்
போக்கவுங் கூடும் புறம். (உஉங)

உதிக்குநாள் போல வொருபேத மின்றி
வதித்தலே முத்தி வகையா—மெதற்கேனு
மையந் திரிபிங் கணுகாது தான்றோற்றே
யுய்வதல வேரு யுறின். (உஙo)

வெளியை யகம்புறத்து மேவாத துண்டேற்
கொளுது மயலுறவு கூடிப்—பிளவாகக்
காணுமே யெவ்வெளியுங் காணுநங் குற்றத்தால்
வீணு யழிவம் விழைந்து. (உஙக)

தேகலக் குள்ளளவுந் தீராத சஞ்சலமே
யாகமெலா மண்பொம்மை யாளன்ரு—லேகமா
ஞானரச மூன்பிருக்க நாடாது மூத்திரத்துக்
கேனலேலீ ரெங்கு மியைந்து. (உஙஉ)

இதுநானென் றின்றைக் கிருக்குது நீங்கி
னெதுநானென் ரூவோ மிதுபோற்—புதுபுதிதா
வாதல் கடமையதே லேயோ விளைப்பார
வேதிலேயோ வுண்டோ வெமக்கு. (உஙங)

இலேயேல் விதிவிலக்கே னீங்குண்டே னானென்
றலேவுக் கிடமே னயலேப்—பலவுடலு
நானன்றேற் றேராதெ னுடாதோ போகமினி
நானயலா காமை நவில். (உஙச)

அயலேநா னென்னற் கறுதி யுடலே
லயலேச் சுகமென் றணுகேன்—மயலிதன்ரூ
வெங்கே கடந்தனீ யெவ்வா றயலாகாய்
எங்கே தயர்மூந்தா னில். (உஙடு)

உடலுதித்தல் யோனி யுயிருதித்த லெங்கே
உடலுயிர் சித்துசட மொன்றே—மடமையாற்
கண்டபடி சொல்லக் கதைகற்றுன் மேவுமோ
விண்டெனி ஙிற்றல் விளைந்து. (உசுசு)

எண்சாணின் மேல்கீ ழிலையோ விடமேதுங்
கண்ணெங்குங் காணுத காரணமென்—மண்ணன்றி
யெங்கே யுடலெதுவு மில்லையே காண்பதெவ
னெங்குமறி வாதலிவிட் டிங்கு. (உசுஎ)

அரியரன் மேல்கீ ழமர்ந்துபதே சித்த
சொருப மெதுவொன்றிற் செப்பாய்—பரமொடுயிர்
சச்சிதா நந்தமெனிற் சூழ்மேலெங் கேகொளலெ
னச்சுலக மேதி லறை. (உசுஅ)

தேகநா னென்றிருந்தேன் றேகிதனைக் காணுமற்
றேகலக்கை விட்டுத் தெரிசித்தேன்—றேகமெலா
நானென் றிருந்தவெலா நானுனேன் சோதியா
வானந்த மேலிடவே யங்கு. (உசுக)

அண்டஞ் சுழலி னதிலுள் வெளியற்றேற்
பிண்டக் கதியுயிர்க்கும் பேசுதமே—கண்டபடி
சொல்லாது நின்மின் றுணிபறிந்து தன்னிலையி
லல்லலென் செய்யு மவண். (உசo)

வெளிக்குப் புறம்புளதேன் மேலாய ஞான
வெளிக்குப் புறம்பிருக்க வேண்டு—மளக்கரிதேற்
சும்மா விருக்கத் தொடருந் தடையுளவோ
நம்மாலே வாய்க்கு நமக்கு. (உசக)

பிறவிநா ளுயிற் பிறவி யகலா
வறிவுநா ளுயி னகலு—மிறைமுயற்சி
யன்றே வழுத்தியு மாவதெவன் .றன்முயற்சி
யன்றே பிறவிமுத்தி யாம். (உசஉ)

தானயல தாகத் தனேக்காணிற் றுன்பமே
தானெனலோ சிற்சோதி தான்காணி—னனந்த
மப்பிலுப் பென்ன வனேத்துங் கனாக்குமே
யெப்பிறப்பு மில்லா திவண். (உசஙு)

பரஞ்சோதி யெவ்வுயிரும் பாராத குற்ற
நிரஞ்சன மாயி னிகழு—மூரந்தானே
சோதனேயிற் காணலாந் தொன்மறைக ளாதியொத்துப்
பேதமுரு தள்ளே பிறழ்ந்த. (உசச)

பொருளெனக் காட்டார் புனையின்றி யொன்றைத்
தெரிவதெவன் சித்துசடத் தீர்வு—குருவாகிக்
கற்றுனேக் கற்றிற் கணமே பொருள்பொருளா
மற்றெதுவும் போக்கா மயல். (உசஞ)

ஆனையார் போற்றலோ வாள்கண் டிலமாயிற்
பேனப் பலகோடி பேசலெவ—னீனை
விழிப்பெருக்கிக் கண்டார் வியக்க வதனு
லழிக்குமோ துன்ப மவம். (உசசு)

தள்ளுவன கொள்ளுவன தானன்றி வேறுயிற்
றள்ளலெவண் கொள்ளலெவண் சாற்றலா—மூள்ளாதென்
ஞானியெனற் கங்காந்தீர் நாட்டறியீர் கேட்டறியீர்
ஞானமஞ் ஞானமல நாம். (உசள)

இமையி லொருங்கினேவி லேதேது காணு
மமையு மலவா வதனி—லிமையோர்க்கு
மென்று னினேவை யிலக்குவை யாதழிது
மென்றே வொருங்குபட லிங்கு. (உசஅ)

சும்மா விருத்தல் சுகமன்றே வெவ்வுயிர்க்கு
மம்மா வதுகிடைத்த லாகுமோ—சும்மா
வுடலுக் கெனலெல்லா மோவ்குகா மாதிக்
கிடமனத்துக் கென்ன வியைபு. (உசக)

கடபேத மண்ணுக்கோ காணு நமக்கோ
மடமைக்கேல் யாவு மடமை—கடவுட்குஞ்
சிவர்க்கு மன்று தெளியாப் புறநாட்டத்
தாவதா லென்றே யறி. (உரு0)

பட்டதெப்பை சென்மமெலாம் பார்க்கின்றே மிப்போது
மிட்டதுக்கத் தாக்கதனு லேனேயம்—விட்டுவிடற்
கையந் திரிபை யளர்த்துத்தி கொண்டெவையும்
பொய்யதிதென் றெங்கும் புகுந்து. உருக)

எங்கே செகத்தோற்ற மெங்கே யிலேயாத
லெங்கே நினேப்புமறப் பெங்னேனே—வங்கலிங்க
பேதம பேதமெனல் பிண்டாண்ட கற்பிதங்க
ளீதெனக் காண்பதென்றே விங்கு. (உருஉ)

தெரிவே செகமாய்த் தெரிவி லிருக்குந்
தெரிவதனேக் காணிற் றெரியு—மருமையெனின்
முன்போ லயலாகு முற்றுணர்ந்தும் யாதுபயன்
இன்பதுன்பத் தாக்கறுவ தில். (உருங)

இயற்சொ றிரிசொல்லா லேதுகற்று மென்ன
வயலேநா னென்ன லகலோஞ்—சுயவடிவாக்
கண்டுலகை வீழ்துங் கனையில் பிறவிதனில்
விண்டுநீற்ப தென்றே விளாந்து. (உருச)

தேகமதைத் தேகியாச் சென்மமெலாங் கண்டவல
மாகியு மின்னு மறிவிழந்தோம்—போகமதை
மெய்ச்சுகமென் றெண்ணியே மேலாஞ் சுகமிழந்தோ
மெய்ப்புருவ தென்னே விலை. (உருடு)

அறிவகலங் காணு ரயலகலங் காணு
ரறிவாழ மெங்ங னறிவார்—பிறிதுமங்ஙன்
கல்லா ரறிவதனைக் கற்றெ னயலதனே
வெல்லார் பிறவி மிகை. (உருசு)

அறிவிலக்க ணங்கல்லா ரன்னியங் கற்றெ
னறிவே பிறவி யடையும்—பிறிதன்றே
யாவுச யிருக்கு மறிவுதனைக் காணளவு
நாசமுரு தென்செயினு நாம். (உஞ்ச)

அறிவிலக்க ணந்தன்னை யன்னிய வேட்டி
லறிந்தாற் பிறவி யறுமோ—வுருதே
யறிந்தபடி தன்னேட்டி லன்னதைக் கண்டாற்
பிறந்திறுவ தெங்ஙன் பிழை. (உஞ்அ)

வானம் பிறந்திறக்கின் வாலறிவா னுர்க்குண்டிங்
கேனறியா ரொவ்வெவரு மிங்நிலையை—யானமட்டும்
வாயால் வதறி வழிவதனுற் கட்டறுமோ
மாயா நிலையா மயல். (உஞ்க)

உருவநா னென்னு முறுதிபோக் கெங்கே
யருவநா னென்ன லணுகத்—தெரிவுருவ
மாவதெங்ங னந்தோ வரிதரி தெங்கணுமே
போவதெங்ஙன் சென்மம் புறம். (உசூ)

பிறப்பதனுக் கெவ்வெவரும் பேணுது மெங்கு
மிறப்பதனுக் கென்னே விடுக்க—மறப்படித்தி
நானலதை நானென்னி னட்டமுரு துள்ளிடுமோ
நானெனலே யெட்டறியோ நாம். (உசுச)

இதுநானென் றெங்கே யெவர்வழக் கற்றூர்
பதிவழக் கற்றதெவன் பாரீர்—பதிபதியென்
றென்னே பிதற்ற லிதுமுத்தி தந்திடுமோ
வுன்னுவா ரெங்கே யுலகு. (உசுட)

சாமியெப் பாவித்தல் தற்பாவங் கற்பிதமே
சாமியீஃ தாமோ தடிபாவஞ்—சாமி
யுருவருவ மூள்ளதில தொன்றுபல வன்றே
தெரிவுமல மூடமல செப்பு. (உசுங)

எவரறிந்தார் சாமி யெதுவும் புறட்டே
யெவர்மத முண்மை யீலையே—யவரவரும்
போக நகரப் புரிசரிதை யாதியதா
மேகலெவ னம்மயக்க மிங்கு. (உசுச)

நானென லன்றே நணுகுவ தெப்பிறப்பும்
நானவை யன்றே நடிவிழந்திங்—கேனயலை
யாயப் புகுந்தி ரதனற் பிறப்பறுமோ
காயத்தை நானென்பீர் கற்று. (உசுரு)

வெளியதனைத் தள்ளியொன்றை வேறுகக் காட்டீர்
வெளிகாட்டீர் தன்னே விலக்கித்—தெளிஞர்போற்
கொண்டுபோ தித்தல் குருடர்வழி காட்டலைப்போன்ம்
உண்டுகொலோ வஞ்சரு மில். (உசுசு)

கண்ணபிரா னென்றறைப்பார் காட்டு நிலையெட்டா
மண்ணமெலாம் பாவனையே யீதவரோ—நண்ணுதே
யுண்டில்லை யாமலவென் றேதற் கரியானே
கண்டவர்க் கில்லைமனங் காண். (உசுஎ)

ஞெப்திப் பிரிய நிலையன்றிக் கண்டிலம்யாம்
ஞெப்திப் பிரிய நிலையன்மேல்—வைத்துப்
பிறவிதொறு மாண்பெண்ணப் பேணி யழிது
மறிவதென்றே வொன்று யவண். (உசுஅ)

ஆணப்பெண் பெண்ணையா ணுயா தவரன்றி
யாணையாண் பெண்ணப்பெண் ணல்லவே—கோணை
யுணர்வீர் கடனு கடனசத்தி யீதே
புணர்வறுவ தென்றே புகுந்து. (உசுக)

ஞெப்திப் பிரிய நிலையொன்றே வேறன்று
ஞெப்தியொன்றே நேயமா நிற்பதனன்—ஞெப்திநிலை
காணுதார் வேறென்பர் கண்டார்க் கயலுண்டோ
நாணுரா ரென்முன் னவின்று. (உஎ0)

பித்தசம யத்தலிவீர் ப்ரஞ்ஞைநிலை கண்டறியீ
ரெத்தையெத் தாலறிந்திங் கின்புறுவீர்—சுத்த
தடியோ வறிவுசுகந் தாண்டியென் கண்டீ
ரடிமையாண் டானே தவண். (உஎச)

அடுத்த சனனமய மாயிற் கலக்க
மடுத்த வறிவுமய மாயிற்—கெடுக்கும்
பிணக்கோல மாதல் பிழையா வுடலே
மணக்கோலஞ் செய்வார்போன் மாண்பு. (உஎஉ)

இருப்பதுநிற் சோதி யிராத துலக
மிருப்பதாய்க் கொண்டுழல்வ தென்னே—விருப்பதெலாஞ்
சோதனையி னில்லாது சோர்வுறுவ தென்கொண்டோ
போதமென வெங்கும் பொலிந்து. (உஎங)

எந்தவான் மாவுக் கெதுசொந்த சென்மமென
லந்தவான் மாவுக் கதுமுத்தி—யந்தநிடங்
காணே மதனுற் கருதுவதெல் லாம்பொய்யே
வீணுஞ் சமயமென மெய். (உஎச)

நானலதை நானென்பார் நாதனிலே பேசலென
னைமட் டும்பிதற்றி னுகுமோ—ஞானவழி
சற்றுமிலா னெங்கணுமே சற்குருவாய் நிற்பனெனி
னற்றிடுமோ சென்மபந்த மங்கு. (உஎடு)

ஆகாயம் போல வறிவசையா தொன்றுபடிற்
போகா மயலனைத்தும் போகுமே—யாகா
தரிதென்னி னுய்த லரிதன்றே யாரு
மொருவுதலென் றேபிறவி யும். (உஎசு)

நினைவெழுத லெங்கே நினைவொடுங்க லெங்கே
யனையவிடந் தேடாதிங் கந்தோ—தனையடியார்
போனடித்துக் காட்டிப் புதுமைசெயி னிற்குமோ
மானத்தின் சற்றே வகை. (உஎஎ)

மானிடரா நிற்பீர் மதியே துயிரன்றே
மானிடஞ் சென்மமன்றே மாள்வதனு—லேனுன்னீ
ரான்ம நிலையன்றே வவ்வவ் வுடலெங்கு
மேன்காணீர் போகத்தா லிங்கு. (உஎஅ)

பெண்ணு ணலியாதி பேசனுமா னத்தாலே
அண்ணலுண் டென்ன லருவழக்காங்—கண்ணினுற்
காணில் வழக்கேது காணென்பர் தெள்ளியோர்
கோண லெதுவாக் கொளல். (உஎசு)

ஏதுசெகமா நிற்ற லெதுவெதைக் காண்ட
லெதிலே யியங்கு மெவையு—மதுதான்
அறிவென்பர் தெள்ளியோ ராகுமே யென்பர்
அறிவன்றி யாவுமிலை யால். (உஅ0)

ஆன்மபோ தஞ்சலிக்கி லாகுமே தேகோகம்
ஆன்மா ஓவோகமென லாகுமே—ஆன்மா
சலியா திருக்கினெனிற் றுணிருமை யன்றே
நிலையாதோ சாயாது நில். (உஅக)

புரிவானே யன்றிப் புடைபெயர்ப் பெங்கே
புரிவானு மன்றே புனைத—லொருவிக்
கணித்த லறியாது கண்டபடி கோடல்
துணிபிதோ ஞானச் சுகம். (உஅஉ)

உடனுனன் முகி லுடலளவாக் காண்பென்
இடந்தினைபா லெற்றிற் கெவர்க்கும்—மடமை
விவேகமுரண் கொள்ளும் வீயா வழக்கே
துவிதமன் றென்றுமன்று சொல். (உஅசு)

ஞானத்தின் மேலியலுஞ் ஞானத்தின் கீழிலையேல்
ஞானம் பரமுலகுஞ் ஞானமே—ஞானஞ்
சுசாதியாதி யேலாமை சோதனையி லென்றுல்
நிசானுபூதி யீதே நிலை. (உஅச)

ஆன்மா பரம்விடய மன்றே யெனத்தெரிந்தும்
என்புகுந்தா ரிங்ங னிசைத்திடுதற்—கான்மா
இருமையு மாகா திசைக்கிற் கொளுதும்
அருமைநிலை யீதென் றறி. (உஅடு)

ஆன்ம விருப்பை யறியாது சாய்தலெவன்
ஆன்மா வலவே யவையிரண்டுந்—தான்ரூனுய்
நிற்றலெனற் கீதுமுர ணீதமெனி லன்னியமாஞ்
சற்றுமுண ராததெவன் ரூன். (உஅசு)

உயர்வுதாழ் வற்ற வறுதிநிலை யீதென்
றுயிர்க்குறுதி யீதென் றுணர்த்தா—ரயல்கடந்தார்
அன்றெனற்குச் சாட்சியிதே யன்றே புலன்மிக்கீர்
இன்றிதோ ஞானமென லிங்கு. (உஅள)

சிற்றறிவு பேரறிவே சிற்றின்பம் பேரின்பம்
அற்றற்ற தாக்காண்ட லான்மாவே—யுற்றுணரின்
வாலமதி யூகமதி மாறிடினுந் தான்மாறு
தேலுமோ வேறு யிவை. (உஅஅ)

தன்மருளே பெத்தமென றன்றெருளே முத்தியெனல்
என்கொண் டிதைமறுப்ப தில்லையே—னன்குரைத்தார்
முத்தியிலு முண்டெனவே மூன்றுமிரு தேற்பார்க்கிங்
கெத்தடைக ளெங்ங னிறும். (உஅசு)

தன்மருளைத் தள்ளிச் சகமாதி காட்டறியார்
தன்றெருளி லெங்ஙனே சாற்றவலார்—என்ன
வனுபூதி யீதேற்பார்க் காகுந்தற் கண்டார்க்
கெனவாகு மீதிங் கிசை. (உகம)

வியாபக மென்னு விளக்க மூலகாய்
வியாபித் தடங்குமதில் வேறுயத்—தியானித்துப்
பஞ்சமூர்த்தி கற்பித்துப் பஞ்சகிர்த்தி யங்கோடல்
அஞ்சுமோ மாயை யதற்கு (உகக)

தன்மருளுந் தன்றெருளுந் தானுகா தென்னிலிதில்
ஒன்றுகொண் டொன்றை யொழித்தலெவன்-என்றெளிலோ
இவ்விரண்டுந் தானல்ல வில்லைத் தனையன்றி
எவ்வித மேற்ப திது. (உசுஉ)

விடயத்தைச் சுட்டாது வேரு யிருக்கின்
விடய மறிவாய் விளங்குந்—தடையென்னே
எத்தைச் சிவமென் றெழுதியது கண்டனரோ
பித்திதற்கு மேலுண்டோ பேசு. (உசுங)

ஆன்மா வறிவென்ரு ராகு மெவர்க்குமே
ஆன்மா வுடலெனவே லாகாதே—ஆன்மா
அறிவனவேல் யாவு மதிலடங்கு மன்ரே
பிறிதுசிவ மென்கை பிறழ்வு. (உசுச)

அவத்தைகள் யாவு மறிவிலன்ரே காண்டல்
எவற்றையு மோர்தலு மீதே—பவத்தொடும்
என்ரன் மறுப்பென் னெவையு மிதின்றடிப்பே
யன்றேற் பிறிதெங்கு ளும். (உசுடு)

அனைத்துமறி வன்றியிலை யல்லவென் ருதல்
தனைத்தா னளக்கிற் சரியா—மெனைத்துணையும்
ஐயமிலை சோதிப்பார்க் கார்மேற் பிழைமறுத்தல்
மெய்யறிவு தானுய் விடின். (உசுசு)

பார்க்கிலிலை யென்பவெலாம் பஃறிசையிற் போய்தெங்கே
பார்க்குமு னுண்டே பகராதென்—றீர்ப்பிதற்கிங்
கையோ விவர்தானே வான்மாவை யெட்டவலார்
மெய்யா யிவர்ஞான மேல். (உசுஎ)

தன்னையு மெட்டறியார் தம்பிரா னெட்டறிவார்
என்ன புதுமையிஃ தென்சொல்வேன்—என்னிலை
தன்னைவிட்டுத் தன்னிழலைத் தானளப்பார் போலுமே
என்னவித ஞான மிது. (உசுஅ)

அல்லதை யாமென் றறிந்ததாா மன்றே
அல்லதை யல்லவென லார்தாஞே—மெல்ல
மயல்வினைவு நம்மாலே மாற்றல்பர ஞலோ
வியன்ஞான மீதோ மிகை. (உ ஈக)

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளாஞ மாஞப் பிறப்பென்—றுரைத்தாரோ
எப்பொருளு மெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (கூ00)

என்ரு ரிருமூயல்வு மேற்கும் வினைமுதரு
ஞென்றே விரண்டோ வுணராதென்—நன்குணர்ந்த
ஞானமென லீதோ நகாரோதற் கண்டவர்தா
மோனமெனல் வெற்ற மொழி. (கூ0க)

தன்னையறி யாவறிவே தானென்பார் சற்குருவோ
அன்னியர்க்கு மீதே யனுபவமேல்—தன்னை
யறிவென்றே கேட்டா ரதுவாகக் காணிற்
பிறிதறிவுண் டென்பரோ பேசு. (கூ0உ)

சோதிக்குச் சோதி துலக்கவெங்குங் கண்டதிலை
ஏதுக் கனுபவமீ தேன்கோடல்—போதிக்கக்
கற்றதோ தன்னயலைக் கட்டறுத்துத் தானுக்கார்
மற்றையர்க்குத் தீர்ப்பார் மருள். (கூ0கூ)

அறிவல்ல வென்பவெலா மாயின் முடிவில்
அறிவாய் விளங்கலெவ னன்தோ—அறிவதனைக்
கண்டா ரிஃதேற்பர் காணுதா ரேனேற்பர்
உண்டுகொலோ ஞான முனின். (கூ0ச)

சிற்சோதி மேல்கீழ் சிறிதொப்புக் காண்டலெவன்
சிற்சோதி யாகத் திகழ்வதனுல்—சிற்சோதி
யல்லவாக் காண்பவெலா மாயா விடத்தன்றே
எல்லையி லின்ப மிது. (கூ0டு)

அறிவே சகமாதி யாகத் தடித்தல்
அறியார்போற் காணு மறியி—னறிவு
தானேயுலகாய்க் கற்பித்துத் தானயலாக் காணும்
தானேச்சுயம்பாக் காண்டலுந் தான். (கூ0சு)

அறிவுக் கயல்விடய மன்னிய மாயின்
அறிவுக் கிறைவ னயலா—மறிவன்றிச்
சோதனையி லிவ்விரண்டுஞ் சோதிக்கக் கண்டிலமே
ஈதென் னனுபவமோ விங்கு. (கூ0எ)

அறிவே விடய மறிவே பரமென்
றறியாத்தன் குற்ற மறியா—தறிவை
யறிவா லறியொண்ணு தாமென்ன லென்னு
நிறையனு பூதிப்பே ரிலே. (கூ0அ)

அயலாகத் தன்னே யறிவ தறிவேற்
சுயமா யறிதற்குச் சொல்லென்—வியன்ஞான
மீதோ விஃதறியா தேற்பரோ மேலாக
யாதோ பயனுண் டிதில். (கூ0க)

தீன்னேத்தான் காணிற் றலிவன் வெளியாவன்
பின்னெதனுற் காண்பன் பிதற்றலே—தன்னேத்தான்
காணி லயல்போங் கதிர்முன் னிருள்போலக்
கோணலெவன் மாறுக் கொளல். (கூ0ம)

தின்மருளுந் தன்றெருளுந் தன்னயலென் றேகண்டார்
என்றீவு சொல்லவிவ தேற்பட்டார்—நன்குணர்ந்த
ஞானமிது வோவறியே னட்டமுற்றுங் கோணலே
னானியார் தன்குற்ற மிங்கு. (கூகக)

அறிவயலைக் காணி னறிவறிவைக் காணும்
அறிவின்மயல் தேற்ற மஃதன்றே—பிறிதன்றே
யுற்றுணராக் குற்ற முமதுகிலே யர்யிருக்க
எற்றிதற்கு மாறென்ப திங்கு. (கூகஉ)

தன்விகற்பே தன்னயலாய்த் தான்காணிற் பூரணமாம்
அன்னியமுண் டென்றளவு மாகுமோ—உன்னுதற்காம்
பூரணப் போலியெனப் போகநிட்டை யெங்ஙனே
ஆரணத்தின் சம்மதமீ தன்று. (கூகசு)

ஆகமத்தின் சம்மதமோ வன்னியமுண் டாக்கோடல்
ஏகபரி பூரணந்தா னெங்ஙனுறும்—உலகிக்கின்
வேதாந்த மாகுமோ வேதாந்தம் போலுலாக்கின்
நாதாந்த மின்றெனினு நன்கு. (கூகச)

அறிவன்றி யானந்த மன்றி யறிவே
தறிவதனைக் காணுர்க் கயலார்—பிறிதன்றே
தன்றெளிவுந் தன்மருளுந் தள்ளியுரைப் பாருண்டோ
ஒன்றெனவு மன்றெனவு மோது. (கூகடு)

அயல்சுயமென் றெங்கே யறிந்தா ரிலையே
அயலைச் சுயமென் றறிந்தார்—மயல்கடந்த
வேதாந்தம் போல்வதெவன் வேதாந்தம் போற்கூறின்
போதாந்த மெங்கே புகல். (கூகசு)

ஒன்றிரண்டாக் கோட லுளவோ தனையன்றி
இன்றென்னிற் முன்மெய் யிலையெவையும்—அன்றே
மறுத்தற் கிடமென்னே வாயடங்கி நிற்றல்
சிறப்போ வலவோநீ செப்பு. (கூகஎ)

நானென் றுடலதனை நம்பிநட்ட முற்றுற்போ
ஞனைலை நம்பய நட்டமுண்டோ—நானென்றுன்
எவ்வுடலு மன்றே யிலைகானென் றெய்ப்புறலென்
இவ்வுணர்வை யெண்ணு தெவன். (கூகஅ)

அல்லதை நானென் றறிந்தகன்று மென்பயனுண்
டெல்லையின்றி நாமறிவா யிங்கிருக்க—மெல்லக்
கரிமுகத்திற் பூசிக் கழுவினய் நட்டங்
கருமோ முகமதற்குத் தான். (கூகக)

இவ்வண்ணம் போதியா தென்னகதை போதித்தல்
எவ்வெவர்க்கு மென்னபய னிக்கதையாற்—செவ்விதாம்
நூதனர்க்குக் கண்டா நுவன்ஞான மீதன்றே
எதுவழக் கற்ற திது. (கூஉ0)

அல்லதைக் கோட லனுமானம் பாவமெனல்
நல்லதோ வள்ளலார் நாட்டலிது—இல்லெனலே
மாற்றலெனக் கண்டா மகிமைசேர் ஞானமல
எற்றலிதை யுண்டோ விழிவு. (கூஉக)

புத்தி விகற்பே புவனமென்றூர் தெள்ளியோர்
புத்திவிகற் பற்றூற் புவனமெங்கே—சத்தியமே
வள்ளலா ரோதா மாற்றல்பத்தி ஞானமது
தெள்ளியோர்க் கொவ்வுமோ செப்பு. (கூஉஉ)

அறிவே யறியாமை யானுப் பணலென்
அறியாரு மேற்பரோ வந்தோ—பிறிதென்னின்
நம்பிக்கை நூலென்பம் ஞானநூ லென்பதெவன்
சம்பந்தர் தீர்ப்பெனினுந் தான். (கூஉங)

சங்கரர் தீர்ப்பதனைச் சாதிப்பார் தெள்ளியோர்
இங்கெவர் தீர்ப்பெனினு மென்னபயன்—சங்கையறச்
சோதனையிற் காட்ட துணிபாயின் மாற்றலெவன்
எத மெவர்பாற் றிசை. (கூஉச)

போக்குவர வற்றப் புறம்பகமென் றிவ்வெளியை
நீக்கித் தனையெட்டார் நின்மலனு—டாக்கியே
எட்டப் புறப்பட்ட தென்புதுமை வள்ளலார்
இட்டதுக்குத் தாக்கறவு தில். (கூஉஞ)

தன்னை யறியாது வேறண்டாய்த் தானறியா
தென்னிற் சடமசத்தென் றேற்குமே—என்னசுகஞ்
சச்சிதா னந்தமெனச் சாற்றச் சிவமேலா
தெச்சைவ ரேற்ப ரிது. (கூஉசு)

இப்படி போலு மிறைக்கிலக்க ணங்களெலாம்
எப்படி யேற்ப திதுநிற்க—விப்பதிக்குப்
பஞ்சகிர்த்தி யாதி பகர லிதபோலும்
விஞ்சனுபூ திற்றிறமோ மேல். (கூஉஎ)

எவர்பவ நீத்தா ரிராகாதி நிற்கச்
சிவனுலகை யாக்கிச் சிதைத்து—மவமாகும்
தானயல தாகா திருக்கிற் றனிப்படுதும்
எனிகழ்த்தல் வாழ்த்த லிசை. (கூஉஅ)

ஞானக் கதிரன்றி நாடுங்கா லேதுமிலை
ஞானமே மேலென்னு நான்மறையும்—ஞானமுனர்
பந்தமுத்தி யோடே பதியாதி யெங்ஙனே
இந்தமுடி பெங்கே யிதில். (கூஉக)

தன்மருளே யன்றிச் சகமாதி காட்டறியார்
என்றெருளைக் கொண்டிங் கிசைத்ததோ—என்புரளி
மூத்தியிலு முண்டென்னன் மூன்று மிதையேற்பார்
எத்திறத்த ராவா ரிசை. (கூகo)

உயிரைச் சுகியா துடலைச் சுகிக்கும்
உயிரோ மனத்தை யொழிக்கும்—அயலதனை
நீக்கித்தா னுக்கு நிலையன்றே ஞானமெனல்
ஆக்கியதெங் கேவள்ள லார் (கூகக)

அடுத்த மயமதா மான்மா வெனன்மெய்
விடுத்தத னுண்மைநிலை வேறு—பெடுத்திசைத்த
தில்லையே வள்ளலா றேற்றத்தாழ் வன்றியிவண்
கல்லதனைப் போலிருப்பு நாடு. (கூகஉ)

ஆயின் வெளியாகு மாயாத போதுலகாம்
ஆயதிங்ஙன் சிற்சோ்தி யாயாதே—போயினுர்
வள்ளலார் கண்டிலரோ மானான மீதாமோ
தெள்ளியோர் முன்னே சிறந்து. (கூகஎ)

வியாபக மென்னும் விளக்க மறந்து
வியாபக மாதல் விவர்த்தம்—வியாபகத்துள்
அல்ல லறப்பதெதிங் காயாது கொள்வதெவன்
செல்லுமோ வள்ளலார் தீர்வு. (கூகூ)

தன்னுல் விளைந்தமயல் தன்னுலன் றேவொழியும்
என்னுது முன்ன ரிசைத்ததெவன்—முன்பின்
முரணுமே யுன்னுதென் மூதுணர்வீ தாமோ
தருணஞா னத்துணிபோ தான். (கூகூரு)

பழுதைபாம் பென்ற பயம்போனுற் பாவித்
தழுதுடம்பை யாட்டுவினு மாமோ—தொழிலொழிவில்
என்னிற் பழுதைசிவ மில்வுலகம் பாம்பன்றே
உன்னிலிது மாறு முறும். (கூகூசு)

உலகுசத் தென்றூர்க் குலகுமித்தை யாமோ
உலகன்றேல் யாதுக் குவமை—பலவாய
தத்துவங்கட் கென்னிற் சகமதனி லொன்றன்றே
அத்துவிதிக் கென்னி லறை. (கூகூஎ)

அதனையிவ றேற்பதெவ னனத்தி லொன்றே
லெதுசகமென் றுரியந்தத் தேற்றூர்—புதுமையிது
யாவுஞ் சிவமெனலே யேன்கற் றவமானூர்
யாவுமய லென்றே யிவன். (கூகூஅ)

புத்திவிகற் பென்னப் புகன்றதன்றே விவ்வுவமை
செத்தையிற்பாம் பெங்கே சிறிதேனு—மித்தகைபோற்
சோதனையி லெவ்வயலுஞ் சோர்ந்துசிவ மாவானேன்
ஏதமெவ னத்துவிதத் தில். (கூகூக)

தன்னை யறியாவிழிபோற் றன்னையறி யாவறிவிங்
கென்ன சிறப்பிற் றிதுகோடன்—மன்னுஞ்
சிவயோகி யென்பதெவன் சிற்சிசாருபங் காணூர்
எவர்க்குடன்பா டாகு மிது. (கூகூ0)

தம்மா லறிவதெது தாமலவாய்ப் போவதெது
அம்மா விசாதி யகன்றதெவண்—சும்மா
இதுஞான மென்னி லிவர்போல்வா ரேற்பர்
மதிதுட்ப மின்றி மகிழ்ந்து (ரூசக)

ஆகமங் கூறுவதே யத்துவித சித்தாந்த
மாகுமெனில் வேத மறைவதெது—போகா
அகம்பிரம மென்னிலெஃ தாகு மகந்தான்
அகமள வின்ரு லறை. (ரூசஉ)

அகமென்ன றற்போத மாமென்னின் மெய்யே
அகமன்றி யாதுசிவ மாதல்—நிகரற்ற
முத்தியிலுங் காணுதென் மோனமெனி னிற்பதெஃ
தெத்திறத்த தென்பனெனி னிங்கு. (ரூசஙு)

தேதகோக மாதி சிவோக மிறவாயதெஃ
தேகோக மென்பவெலா மெண்ணுதென்—னுகமின்றிக்
கண்டபடி சொல்வதெவன் காணு ரிலையென்ரே
விண்டநிலை யீதெனலோ மெய். (ரூசச)

இதுவென்ற தெல்லாம்பொய் யென்ருலெ வர்க்கோ
அதுதனக்கா மென்னி னறைதும்—இதுவென்
றறிவ தறிவன்ரே வவ்வறிவைத் தள்ளிப்
பிறிதுணர்த்த வல்லாரார் பேசு. (ரூசடு)

அறிவுக் கயல்விடய மன்றேற் சிவமும்
அறிவுக் கயலென்ன லாகா—தறிவென்ப
தந்தந்த வாகார மாவதெனி லவ்விரண்டுஞ்
சொந்தவரு வாவதெங்ஙன் சொல் (ரூசசு)

சிவமு மிதுவென்று செப்பிலென்ன தோடஞ்
சிவமு மயலன்ரே தேரிற்—சிவமேனும்
பொய்யென்று காட்டப் புகுத்தா ரிதுவென்றிங்
கையோ வறியா ரது. (ரூசஎ)

தெருளுக்கு வேரஞ் சிவமே லுலகு
மருளுக்கு வேரும் மயக்கென்—னிருமைக்கும்
வேறன்றேற் சுட்டலெவன் மேல்கீ ழெவையேனுங்
கூறினரே மித்தையெனக் கொண்டு (நூசஅ)

ஒருபோது நூல மொருபோது சாயை
ஒருபோது பாழிவ் வுணர்வைத்—திரிபோதும்
ஆய்ந்திருக்கிற் சோதி யயலன்மை தானுதல்
போயிருமை நிற்றல் புதை. (நூசக)

சுவானுபூதிவிளக்கம்

முற்றிற்று.

பரிசோதனபத்திரம்.

சுவானுபூதிவிளக்கம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
க	ச	புத்தி	யுத்தி
உ	கச	லுடவோ	லுடலோ
ச	க0	ளென்பதனில்	ன்பதனில்
கஉ	ச	கண்டிலயம்	கண்டிலம்
கடு	டு	தகைத்த	தகைத்த
கள	சு	தான்காண்	தான்கண்
உடு	ங	ளாருண்டான்மா	ளாருண்டே-யான்மா
உசு	டு	யூனே	லூனே

ஜீவகாருண்ணியவிளக்கம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
ச	கஅ	சொல்கற்ற	சொற்கற்ற
அ	உ	தானெங்கே யடுத்த	தானெங் கடுத்த
க0	உ	யொரிஇ	யொரீஇ
ஷி	ங	மொரிஇ	மொரீஇ
ஷி	உ0	யெனில்	யெனி
கக	ச	ஞட்டு	ணூட்டு
கஅ	உள	வுலக	மூலக
உ0	உக	நா	நாண்
உசு	க0	னிருத்தி	னிறுத்தி
ஷி	உக	முழிய	யுமிழ
ங0	எ	யோக்கியத்தா	யோக்கியத்தான்
ஙடு	ங	னேர்த	ரேர்த
சக	உஉ	மயலாம்	மயலாகும்